# மதிப்புக்கூட்டலுக்கு பயன்படும் பல்வகை உணவு பதப்படுத்தும் இயந்திரம்

ம.இரம்யாசிவசெல்வி மற்றும் பெ.மகேஸ்வரன்
*மனையியல் தொழில்நுட்ப வல்லுநர் திட்ட ஒருங்கிணைப்பாளர் வேளாண் அறிவியல் மையம், தேனி மாட்டம்
9578884432, manorani87@gmail.com

விவசாயிகள் தாங்கள் விளைவித்த பொருட்களுக்கு தகுந்த விலையில்லாமல் குறைந்த விலைக்கு விற்பனை செய்வதன் மூலம் போதிய வருமானம் இல்லாமல் சிரமத்திற்குள்ளாகும். இன்றைய சூழலில் அறுவடை பின்சார் தொழில்நுட்பங்கள் மற்றும் மதிப்புக்கூட்டல் என்பது மிக முக்கியமானதாக திகழ்கிறது.

அறுவடை பின்சார் மற்றும் மதிப்புக் கூட்டப்பட்ட தொழில்நுட்பங்கள் மூலம் பொருட்களின் தரம் மற்றும் வாழ்நாட்களை அதிகரிப்பதுடன் பல்வகை மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் தயாரித்து வருமானம் ஈட்டமுடியும். பெரும்பாலும் தொழில்முனைவோர்கள் பதப்படுத்துதல் மற்றும் மதிப்புக் கூட்டலுக்கு தனித்தனியான இயந்திரத்தை பயன்படுத்தும் போது அதிக செலவு ஏற்படுகிறது. மேலும், வேலையாட்களின் பற்றாக்குறை ஏற்படுகிறது. ஆகவே விவசாயிகள் மற்றும் தொழில்முனை வோர்கள் புதிய தொழில்நுட்பங்களை கற்று கையாள்வதன் மூலம் அதிக அளவில் பயன்பெற முடியும்.

இந்த இயந்திரமானது, ஹரியானா மாநிலம் யமுனா நகரைச் சேர்ந்த தராம்வீர் கம்போஜ் என்பவரால் கண்டுபிடிக்கப் பட்டு அகமதாபாத்திலுள்ள தேசிய கண்டுபிடிப்புகள் நிறுவனம் மூலம் அங்கீகரிப்பட்டது. தேசிய கண்டுபிடிப்புகள் நிறுவனத்தின் மூலம் பரவலாக்கப்பட்டு வருகிறது.



**பல்வகைப்பயன்பாடு இயந்திரத்தின் சிறப்பியல்புகள்:** தோல் உரித்தல், அரைத்தல், கலக்குதல், பதப்படுத்துவதற்கு பயன்படுகிறது.

**இயந்திரத்தின் விலை:** ரூபாய் 90,000 முதல் 2,50,000/— வரை உள்ளது.

**தோல் உரித்தல்:** வெங்காயம், பூண்டு மற்றும் இஞ்சி ஆகியவற்றில் உள்ள வெளிப்புறத் தோலை நீக்கப் பயன்படுகிறது மேலும் துண்டு துண்டாக வெட்டி அரைப்பதற்கு, பேஸ்ட் மற்றும் ஊறுகாய் தயாரிக்கவும் பயன்படுகிறது. பேஸ்டை சூரிய உலர்த்தி மூலம் உலர வைத்து பல்வேறு விதமான மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்களான வெங்காயம், பூண்டு மற்றும் இஞ்சி பொடிகள் மற்றும் சூப்பு மிக்ஸ் தயார் செய்யலாம். மேலும் மருத்துவக்குணம் நிறைந்த கருப்பு பூண்டு தயார் செய்வதற்கும் ஏற்றதாகிறது.

**மூலிகைத் தண்ணீர் மற்றும் ஜெல்:** சோற்றுக்கற்றாழை, வேம்பு, துளசி, வெற்றிலை, ரோஜா போன்ற பொருட்களிலிருந்து தண்ணீர் தயாரிக்க பயன்படுகிறது. ஒரு மணி நேரத்தில் 1 லிட்டர் மூலிகைத் தண்ணீர் கிடைக்கும். 1 கிலோ மூலிகையிலிருந்து 400—500 மிலி மூலிகைத் தண்ணீர் பெற முடியும். மேலும் 1.25 கிலோ சோற்றுக்கற்றாழையிலிருந்து 1 லிட்டர் ஜெல் எடுக்கலாம். பின்பு ஜெல்லை பயன்படுத்து பல்வகை மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்கலாம்.

மூலிகைத் தண்ணீரிலிருந்து தயாரிக்கப்படும் உணவுப்பொருட்களான